RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன்- 'சேற்றில் மனிதர்கள்' நாவலில் கிராமியச் சூழல்

ச. சாந்தி, [அ *]

[அ] மொழித்துறை-தமிழ், எம்.ஓ.பி. வைணவ மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600 034. இந்தியா,

# The Representation of Rural Life in Rajam Krishnan's Saetril Manithargal

S. Santhi [a, *]

[a] Department of Languages –Tamil, M.O.P. Vaishnav College for Women (Autonomous), Nungabakkam, Chennai-600 034. India

*Corresponding Author: santhimanikandan78@gmail.com

Received: 27-11-2025
Revised: 24-02-2026
Accepted: 11-03-2026
Published: 17-03-2026

**ABSTRACT**

Rajam Krishnan is widely recognized as one of the foremost writers of Tamil fiction for her vivid portrayal of social realism. Her novels authentically document the lives of marginalized communities by exploring themes such as rural poverty, agricultural labour, caste and class conflicts, the status of women, and the intimate relationship between human beings and nature. Through her realistic narratives, she captures the complexities of village life while drawing attention to the socio-economic challenges faced by ordinary people. The novel Saetril Manithargal (People in the Mire) is regarded as a significant social document that presents the realities of rural society without romanticization or embellishment. It portrays the everyday experiences of villagers, highlighting their struggles for survival, dependence on agriculture, economic hardship, and the inequalities embedded in rural social structures. The novel also examines the effects of caste hierarchy, social exclusion, gender discrimination, and the resilience of rural communities in confronting adversity. By depicting the interconnectedness of people, land, and nature, Rajam Krishnan offers a realistic and compassionate portrayal of village life. The rural environment in the novel functions not merely as a physical setting but as a dynamic social and cultural space that shapes the identities, relationships, and aspirations of its inhabitants. Through detailed descriptions of the landscape, occupations, customs, and social interactions, the novel reveals the strengths and contradictions of rural Tamil society. This article examines the rural milieu depicted in Saetril Manithargal, analyzing how Rajam Krishnan represents village life, social realities, and human relationships. The study highlights the novel's contribution to Tamil social realism and demonstrates its value as an important literary record of rural culture, social transformation, and the lived experiences of marginalized communities.

**Keywords:** Dowry, Village, Feminism, Suicide, Farmers, Caste system

## முன்னுரை

தமிழ் நாவல் இலக்கியத்தில் சமூக யதார்த்தத்தை உயிர்ப்புடன் பதிவுசெய்த எழுத்தாளர்களில் இராஜம் கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர். குறிப்பாக, கிராம மக்களின் வாழ்க்கை, உழைப்பு, வறுமை, சாதி-வர்க்க முரண்கள், பெண்களின் நிலை, இயற்கையுடன் மனிதன் கொண்ட உறவு போன்ற அம்சங்களை ஆழமாகக் கவனித்த எழுத்தாளராக அவர் விளங்குகிறார். "சேற்றில் மனிதர்கள்" என்ற நாவல், கிராமச் சமூகத்தின் நிஜ வாழ்வை எந்த அலங்காரமுமின்றி வெளிப்படுத்தும் ஒரு சமூக ஆவணமாகக் கருதப்படுகிறது. இந்நாவலில் பிரதானமாக வெளிப்படும் கிராமச் சூழலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஊர்த்திருவிழா நடத்துதல்

பல சாதி சமயங்களைப் பின்பற்றும் மக்கள் அப்பிரிவினைகளைத் தள்ளிவைத்துவிட்டு, ஒன்றுகூடி நடத்தும் விழாவினை ஊர்த்திருவிழா என்று கூறலாம். இவ்விழாக்கள் இன்றும் கிராமப் புறங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறான ஊர்திருவிழாவானது, சாதியச் சிக்கலின் காரணமாக (ஊரில் திருவிழாவினை) நடத்தாமல் பத்து வருடமாக கோயிலை திறக்காமல் இருக்கிறார்கள். கோயில் திறக்காமைக்குக் காரணமாக இருப்பது, மக்களில் உயர்வு தாழ்வு எனக் கருதும் போக்கினை எடுத்துக் கூறலாம். இச்சிக்கலை,

“கடைசி மகன் கண்ணனும் இவள் அண்ணனும் சம வயசுத் தோழர்கள். கண்ணனுக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது. ஆனால் அவன் மனைவி இங்கு வந்து அம்சு பார்த்ததில்லை. பெயரியம்மா மட்டும் அடிக்கடி அவலிடித்துக் கொண்டும் மாவிடித்துப் பணியாரம் சுட்டுக்கொண்டும் பேரப் பிள்ளையைப் பார்க்கப்போவாள்.

கோயில் சுத்துல குடிசயப்போட்டுட்டு அங்கியெ கூச்ச நாசாமில்லாம கன்னுக்குட்டியத் தோலுரிச்சிக் கண்டம் போடுறானுவன்னு விருத்தாசலம் கத்தினானாம். எங்கிட்டக்கூட முன்ன வக்கீலையரு சம்சாரம் வந்தப்ப சொன்னா. எங்க பார்த்தாலும் சண்டையும் கறுப்புமாயிருக்கு. பத்து வருசமா முடக்கிப்போட்ட கோயிலைப் பார்க்கனும். அவ ஊர்த்தேவதை. நான் கூட்டு வுருத்தாலத்துக்கிட்டச் சொன்னேன்னாங்க.” (சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப. 73) என்ற மேற்கண்ட அடிகள் பத்து வருடங்களாக திருவிழா நடத்தாமல் உள்ளதைக் காட்டுகின்றது. இவ்வாறு நடத்தாமல் இருக்கும் ஊர்த்திருவிழா அந்நாளில் சிறப்பாக நடந்தாக மக்கள் நினைத்து வருந்துவதை,

“இந்த அம்மனுக்கு அந்த நாளள எங்க மாமனார் நாளள திருவிழா எடுப்பாங்க. காசுமாலை, சரப்பள்ளி ஒட்டியணம், பதக்கம், ஜடை மொக்கு, முத்துப் பதிச்ச தலைசாமான், எல்லா நகையும் போட்டு, பத்துநா விதவிதமா அலங்காரம் பன்னுவாரு குருக்கள்” (சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப.73) என்ற மேற்கண்ட அடிகளால் ஊர் தேவைதைக்கு எடுக்கப்படும் விழாவினைப் பற்றியும், ஊர் தேவதை அணிந்திருந்த பலவித நகைகள் பற்றியும் அறிந்துகொள்ள முடிகின்றது.

## வரதட்சணை

பெண்கள் வாழ்வினைச் சிதைக்கும் சொற்களில் வரதட்சணையையும் ஒன்றாகக் கூறலாம். ஏனெனில், அந்த அளவுக்கு, வரதட்சணைத் தரமுடியாத காரணங்களில் பல பெண்களுக்கு நல்ல மணமகன் கிடைக்காத சூழ்நிலைகள் அக்காலங்களில் உண்டு. காரணம், மக்களிடையே காதல் திருமணம் பற்றிய புரிதல் இல்லாமையும், வரதட்சணை தருவதும் வாங்குவதும் குற்றம் என்ற புரிதலும் இல்லாமையும் காரணமாகக் கூறலாம். இத்தகைய வரதட்சணை தருகின்ற சிக்கலை,

“கட்டிக் குடுக்கிறதுன்னா லேசாயிருக்கா? உங்கம்மா இப்பவே மாப்பிளக்கி வாட்ச், மோதிரம் போடனும், இருபத்தொரு ஏனம் குடுக்கனும், அப்பிடி இப்பிடின்னு பிளான் போடுறா. ஒரு அஞ்சு ஆயிப்பூடும் இதுவே சவரன் என்ன விலை விக்கிறாங்க? தாலித் தங்கமே ஆயிப்பூடும்... கடன் வாங்கிக் கல்யாணம் கட்டிப் பிடறேன். பிறகு உன் புருசன் முனஞ்சி படிக்க வச்சோ வேலை வாங்கியோ குடுக்கட்டும் என்று பொன்னடியானைப் பார்த்துக் கொண்டு கேலியாகக் கண்களைச் சிமிட்டுகிறார்” (சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப. 65) என்ற மேற்கண்ட அடிகள் அக்காலங்களில் திருமணத்திற்குக் கொடுக்க முடியாத வரதட்சணைப் பொருட்கள் பற்றி பேசுவதனை அறியமுடிகின்றது. மேலும், அக்காலத்தில் தங்க நகை சவரனுக்கு அதிக விலையில் இருந்ததையும் குறிப்பாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது. இதனைப் போன்றே, இன்று தங்கம் விலை இமாலய உச்சத்திற்குச் சென்று கொண்டிருப்பதால், இனி கல்யாணத்திற்குத் தாலி வாங்குவது கூட பெரும் சிக்கலான இருக்கும் என்பதை உணரமுடிகின்றது. எனவே, அன்றைய காலமாக இருந்தாலும் இன்றைய நவீன காலமாக இருந்தாலும் வரதட்சணை கொடுத்து பெண்ணைத் திருமணம் செய்தாகும் சூழ்நிலை இருப்பதால் வரதட்சணையை ஒரு சமுதாயச் சிக்கலாக எடுத்துகொள்ளலாம்.

இதே வரதட்சணை சிக்கலைப் பற்றி குறிஞ்சித்தேன் என்ற நாவலில், ஒரு ஆண் மகன் பெண் வீட்டிற்கு வரதட்சணை தந்து உங்க பெண்ணை எனக்குத் திருமணம் செய்துத்தாருங்கள் என்று கேட்பதையும் இராஜம் கிருஷ்ணன் நாவலில் பார்க்கலாம். இதனை,

“நிறைய வெள்ளிப் பணம் கொண்டு வந்து வைத்து மாமன் காலில் விழுந்து, பெண்ணைத் தாருங்கள் என்று முறைப்பையன் கேட்கையில் மறுக்கலாமா? கிருஷ்ணன் இரண்டு நூறு தருவானா? தங்கமனிச் சரமும் கடமும் வளையலும் போடுவானா?” (குறிஞ்சித்தேன், ப.119) என்ற மேற்கண்ட அடிகள் ஆண்களும் பெண்களைத் திருமணம் செய்ய வரதட்சணை தந்தார்கள் என்பதை குறிஞ்சித்தேன் நாவலின் வழி அறிந்து கொள்ளலாம்.

## வாழவெட்டி எனும் பெண்கள் நிலை

கணவனை இழந்த பெண்ணை, விதவை என்று பலவிதக் கொடுமைகள் செய்வதனைப் போன்று, கணவன் இருக்கும் காலத்தில் பெண் வீட்டிலிருந்து ஒவ்வொரு சடங்குகளின் போதும் பெண்வீட்டுச் சீர் வரவேண்டும் என எதிர்பார்ப்பது அக்கால நிலையாக இருந்தது. அவ்வாறே ஒவ்வொரு சடங்கின் போதும், பெண்கள் தன் பிறந்த வீட்டிலிருந்து பணம், நகை கொண்டு வராவிட்டால், அப்பெண்ணை அவளைப் பிறந்த வீட்டிற்கு அடித்து அனுப்பும் நிலை அக்கால கிராமங்களில் இருந்தது. அவ்வாறு, தன்வீட்டிலே வந்து வாழாவெட்டியாக இருந்த பெண்களின் நிலையினை ராஜம் கிருஷ்ணனின் சேற்றில் மனிதர்களின் பதியப்பட்டுள்ளது.

“பெண்கள் மூவரையும் கட்டிக்கொடுத்தாயிற்று. கடைசிக்காரி பஞ்சமியைத்தான் ஐயனார் குளத்தில் கட்டியிருந்தான். அங்கே ஏதோ தகராறு. கையில் ஒரு குழந்தையுடன் அவள் தாய்வீடு வந்து ஐந்தாறு மாதமிருக்கும். புருஷன் விலக்கிவிட்டான் என்றுதான் சொன்னார்கள். அந்தப் பெண்ணின் மாமியார்க்காரிதான் இறந்துபோனாளா, பெண்ணை விலக்கிய பிறகு சாவு வாழ்வு பாத்தியதை இல்லை என்ற மட்டில் விவகாரம் கிளம்பி அவரை மத்தியஸ்தக்துக்கு வந்து தேடியிருப்பார்களோ?” (சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப. 11) என்ற மேற்கண்ட அடிகள், பெண்ணைப் புருஷன் விலக்கிவிட்டு ஐந்தாறு மாதங்கள் தாய்வீட்டிலே வாழாவெட்டிபோல இருந்தாள். அதன்பின் தாய்வீட்டின் சார்பில் மத்தியஸ்தத்துக்கு (சமாதானப் பேச்சுக்கு) ஒருவன் சென்று பேச வேண்டிய சூழ்நிலையை அவ்வரிகளால் அறிந்துகொள்ளலாம்.

## கிராமங்களின் பிரச்சனை

இன்றைய நவீன காலத்திலும் சுதந்திரம் அடைவதற்கு முன்பு இருந்த சாதிய சிக்கல்கள் அப்படியே மாறாமல் இருக்கின்றன. சான்றாக, இன்றும் இரு சுடுகாடு, இருகோயில், ஊர் - சேரி இரண்டாக இருப்பது, இரு தண்ணீர் தொட்டி, இரட்டைக் குவளைத் தேனீர் என பலவற்றைச் சொல்லலாம். அதனைப் போன்றே, சாதிய நடைமுறைகளாக செருப்பு அணிவதைத் தடுத்தல், கோயிலுக்குள் அனுமதிக்காமை, ஊருக்குப் பொதுவான நீர்நிலைகளில் தண்ணீர் எடுக்க விடாமை, நீர்நிலைகளில் குளிக்கவிடாமை, தோலில் துண்டுபோடுதல் கூடாது, பெரிய மீசை வைத்திருத்தல் கூடாது, கோயில்களில் பெரிய ஒலிபெருக்கியில் பாடல் போடுவது கூடாது, தனியே தேர் இழுத்தல் கூடாது போன்ற ஊர்க்கட்டுப்பாடுகள் எனப் பல சாதிய சடங்குகள் இன்றும் மாறாமல் அப்படியே கிடக்கின்றன. இத்தகைய சில சிக்கல்கள் ராஜம் கிருஷ்ணன் அவர்களின் படைப்புகளிலும் காணமுடிகின்றது. சான்றாக,

“அவன் சொல்லிட்டிருந்தான். என்னங்க போட்டம் போராடுகிறது? இன்னும் எங்க சேரில கோடை வந்தா குடி தண்ணி இல்ல. மனிதன் செத்தா புதைக்கச் சுடுகாடு இல்ல. ஒட்டுமொத்தமா மதம் மாறுறோம்னு அறிக்கைவுடலாம்னு பார்க்கிறேன்னு சொல்லிவிட்டு ஆஹாஹா என்று சிரிக்கிறார். சம்முகத்துக்குச் சுருக்கென்று ஊசி குத்துகிறது. படலையைத் தூக்கி எறிஞ்சிட்டுத் தோப்பு வழி பொணத்தைக் கொண்டு போங்கடா என்றாரே என்ன செய்தார்களோ இந்த நெருக்கடிகளில்கூட விட்டுக்கொடுக்காத சண்டியர்கள் இருக்கிறார்கள். நீங்க சிரிக்கிறீங்க. அன்னிக்குப் போராடித் தலைதூக்கியது உண்மைதான். ஆனா இன்னும் போராடுற நிலையிலேயே இருக்கிறோம்ங்கிறத நினைச்சா எதுவும் தோணல.” (சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப. 32)

“ஐயனார் குளத்துக் குடியிருப்பில் இருந்து இறந்துபோனவரின் சடலத்தை ஆற்றுக்கரைக் காட்டுக்கு கொண்டுவர வழியில்லை. இந்தப் பிரச்சனைகளை எடுத்துக்கொண்டு பல தடவைகள் கோரிக்கை மனு கொடுத்துவிட்டார்கள். ஐயானர் குளம் மட்டும் இத்தகைய பிரச்சனைக்குரிய இடம் அல்ல. பல குடியிருப்புகளின் நிலையும் இதுவே” (சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப. 15) என்ற மேற்கண்ட அடிகள், செத்த பொணத்தைக் கூட ஊர்வழியில் செல்லவிடாமல் தோப்பு என்ற விவாசய நிலத்தின்வழியே எடுத்துச்செல்ல வைத்ததையும், கோடைக்காலம் வந்தால் தண்ணீர் பிரச்சனையும் இருந்ததை இவ்வரிகளால் அறியமுடிகின்றது.

## விவசாயிகளின் கடன் தொல்லை

மக்கள் வயிறு நிறைவதற்காகப் பாடுபடும் விவசாயிகள், தாங்கள் விதைக்க கடன்களையே வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மழையில்லாத சூழல், போதிய நீர்வசதி இல்லாத நிலை அல்லது அரசு, நீர்நிலைகளை முறையாகத் திறக்காமை போன்ற பலவித காரணங்களால் விவசாயிகள் பயிரிடக் கடன்களை வாங்குகின்றனர். ஆனால், அக்காலங்களில் ஒருவீட்டில் வாங்கும் கடனை அடைக்கமுடியாமல் பலர் தற்கொலை செய்துகொள்வதும், பணம் கொடுக்குப்பவர் பெரிய மனிதர்கள் விவசாயிகளின் வீட்டுப் பெண்களை அபகரிப்பதும் அக்காலத்தில் இருந்தது. இவ்வித விவசாயிகளின் நடைமுறை சிக்கல்களில் ஒன்றினை ராஜம் கிருஷ்ணன் படைப்புகளிலும் காணமுடிகின்றது. சான்றாக,

“ஏதோ இருநூறு முந்நூறுன்னா ஒழிஞ்சி போவுதுன்னு சமாளிச்சுக் குடுத்துடலாம். ஒரேமுட்டா ரெண்டாயிரம்னா எங்க போக? அறுப்பானதும் திருப்பிடறதாச் சொல்லி யாரிட்டன்னாலும் புரட்ட முடியாதாப்பா? அவளுக்கு எப்படியேனும் இடத்தைப் பிடித்துவிட வேண்டும் என்ற துடிப்பாக இருக்கிறது.

விவசாயத்துக்கே அறுப்பை நம்பிக் கடன் வாங்கியிருக்கும் நிலை. அதுவும் குறுவை ஒரு சூதாட்டம்தான். வந்தால் வந்தது. வராவிட்டால் போச்சு. பச்சை நெல்லைக் களத்திலேயே விற்றுத் தொலைக்க வேண்டும். அந்தக் கெடுபிடியைத் தெரிந்துகொண்டு வியாபாரி கொள்ளாவிலைக்குப் பேசுவான். என்ன போய்ச் சொல்லி அழ”(சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப. 25) என்ற மேற்கண்ட அடிகள், விவசாயிகள் வாங்கும் கடன் பிரச்சனைப் பற்றியும் விவசாயப் பொருட்களை வாங்க கெடுபிடியாக இருக்கும் வியாபாரிகள் பற்றியும் அறிந்துகொள்ள முடிகின்றது.

## கிராமங்களின் பதிவு

வளர்ந்து வரும் நகரமயமாதலின் காரணமாக கிராமப்புறங்களின் பழைய நினைவுகளும் சுவடுகளும் பசுமை மாறாத தன்மைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலையில், அக்காலக் கிராமங்களில் உள்ள வீடுகளையும், அவ்வீட்டில் புழங்கிய புழங்கு பொருட்களையும் பதிவுசெய்து வைப்பது தேவையான ஒன்றாகக் கருதலாம். அத்தகைய கிராம வீட்டின் பதிவினை ராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் உள்ளதை,

“மெள்ளச் சுவரைப் பற்றிக்கொண்டு எழுந்து உள்ளே வருகிறார். நடுவில் இருக்கும் பகுதிதான் புழங்கும் இடம். ஓரத்தில் மண்குதிர் சாணி மெழுகிப் பளிச்சென்று மஞ்சளும் குங்குமமும் அழியாமல் இருப்பது விவரமாகப் புலனாகாது போனாலும் அந்த மூலை இவருக்கு லட்சுமி மூலை. அதற்கு அருகில் ஓரமாகக் கொடியில் மடித்துப் போட்டிருக்கும் புடவை, வேட்டி, துணிகள்கூடை, முறம், சுவரில் மாட்டியிருக்கும் கள்ளிப்பெட்டி அலமாரியில் புத்தங்கள் எல்லாம் இரண்டு தலைமுறைகளையும் இணைக்கும் சின்னங்கள். அந்த ஓலைக்கூரை வீட்டின் பொக்கிஷமான அறை உள்ளே சென்ற பின்னரே புலப்படுகிறது. பகல் வெளிச்சத்தில்கூட அந்த அறையில் இருட்டு ஆட்சி புரியும். உள்ளே புளி மற்றும் உளுந்து பயறு சேமித்து வைக்கக் கூடிய பானைகள், விதைக் கோட்டைகள், துருப்பிடித்த இரண்டொரு தகர டின்கள் ஆகிய சாமான்களுடன் பழையதாகிப் போன நாகப்பட்டினம் டிரங்குப்பெட்டி ஒன்றும் இருக்கிறது” (சேற்றில் மனிதர்கள், ராஜம் கிருஷ்ணன், ப. 11) என்ற மேற்கண்ட அடிகள், அக்கால மக்களின் வீடுகளினுள் புழங்கிய பொருட்களையும் அக்காலக் குடிசை வீடுகள் எவ்வாறு சாணம் மெழுகிப் பளிச்சென்று மஞ்சளும் குங்குமமும் அழியாமல் நின்றது என்பதையும் இவ்வரிகளால் அறியமுடிகின்றது.

## முடிவுரை

சேற்றில் மனிதர்கள் நாவலில், கிராமச் சூழல் ஒரு பின்னணியாக மட்டுமல்லாது, ஒரு பாத்திரமாகவே செயல்படுகிறது. கிராமத்தின் இயற்கை, பொருளாதாரம், சமூக அமைப்பு, மனித உறவுகள் அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்ததாக சித்தரிக்கப்படுகின்றன. இராஜம் கிருஷ்ணன், கிராம வாழ்க்கையின் உண்மை முகத்தை எந்த மறைப்புமின்றி வாசகனுக்கு காட்டுகிறார். இதனால், இந்நாவல் தமிழ் சமூக யதார்த்த நாவல்களின் வரிசையில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

## References

Rajam Krishnan, (2001) Seatril Manithargal, Dhagam publication, Chennai

Tamil Naval varalaaru, Research Articles, Manivasagar Pathipagam, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License